# பொருளியல்

## செலவீட்டு முறையில் தேசிய கணக்கீடு.



**தேர்ச்சி 5**

**தேர்ச்சி மட்டம் 5.6**

## செலவீட்டு முறையில் தேசிய கணக்கீடு.

செலவீட்டு அணுகுமுறையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கணிப்பிடப்படுவது பொருளாதாரத்தில் குறிப்பிட்ட தொரு காலப்பகுதியில் உற்பத்தி செய்த பொருட்கள் , சேவை-களை கொள்வனவு செய்வதற்காக செய்யப்பட்ட மொத்தச் செலவுகளின் பணப் பெறுமதி ஆகும்.

**மொத்த உள்நாட்டுச் செலவு மூலங்கள்**

- மொத்த இறுதி நுகர்வுச் செலவு
  - வீட்டுத்துறை நுகர்வுச் செலவு
  - இலாப நோக்கற்ற வீட்டுத் துறைக்கு வழங்கப்படும் சேவைகள்
  - அரசின் நுகர்வுச் செலவு
    - தனிநபர் தொடர்பான அரசநுகர்வுச் செலவு
    - கூட்டு நுகர்வுச் செலவு
- மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கச் செலவு
  - மொத்த நிலையான மூலதனவாக்கச் செலவு
  - இருப்பு மாற்றம்
  - பெறுமதியில் ஏற்படும் மாற்றம்

### வீட்டுத்துறை நுகர்வுச் செலவு

குறிப்பிட்ட வருட காலப்பகுதியில் வீட்டுத்துறையினர் இறுதிப் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு செய்யப்பட்ட செலவுகளின் கூட்டுத் தொகை வீட்டுத்துறை நுகர்வுச் செலவு ஆகும்.

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பெருளியல்,(யா/அருணோதயாக் கல்லூரி,அளவெட்டி)

கணணி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜனார்த்தனன் ஆசிரியர் - கணிதம்,(கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

### அரச நுகர்வுச் செலவு

குறிப்பிட்ட வருட காலப்பகுதியில் மத்திய அரசு மற்றும் அதன் உப நிறுவனங்கள் பொருட்கள் சேவை-களைக் கொள்வனவு செய்வதற்குச் செய்யும் செலவு அரச நுகர்வுச் செலவு ஆகும் இச்செலவின் பகுதிகளாவன

1) தனிநபர் தொடர்பான அரசநுகர்வுச் செலவு

அரசினால் தனிநபர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நுகர்வுச் செலவுகள் தனிநபர் தொடர்பான அரசநுகர்வுச் செலவாகும்.

உதாரணம் கல்வி, சுகாதாரம்

2) கூட்டு நுகர்வுச் செலவு

அரசினால் மக்களது கூட்டு நுகர்வின் பொருட்டு மேற்கொள்ளப்படும் செலவுகளை இது குறிக்கின்றது.

உதாரணம் :- பாதுகாப்புச்செலவு, பொதுநிர்வாகச்செலவுகள்

### மொத்த உள்நாட்டு மூலதனவாக்ககச் செலவு

குறிப்பிடட வருட காலத்தில் புதிதாக மூலதனப் பண்டங்களை உருவாக்குவதற்குச் செய்யப்பட்ட செலவுகள் மொத்த உள்நாட்டு மூலதனவாக்ககச் செலவாகும் இதன் உள்ளடக்கங்களாவன

1) மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கச் செலவு குறித்த வருட காலத்தில் உள்நாட்டு பொருளாதாரத்திற்கு சேர்க்கப்படும் நீண்ட கால மூலதனப் பண்டங்கள் தொடர்பான மொத்தச் செலவுகள் இதுவாகும்.

### மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கத்தின் மூலங்கள்

- கட்டடவாக்கம்
- பொறிகள், கருவிகள் மற்றும் ஆயுத முறைமை
- போக்குவரத்துக் கருவி
- தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பக்கருவி
- பயிரிடப்பட்ட உயிரியல் மூலப்பொருட்கள்
- அறிவுசார் ஆதன உற்பத்தி

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பெருளியல்,(யா/அருணோதயாக் கல்லூரி,அளவெட்டி)

கணணி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜனார்த்தனன் ஆசிரியர் - கணிதம்,(கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 2) இருப்பு மாற்றம்

குறிப்பிட்ட வருட ஆரம்பத்தில் காணப்படும் இருப்பிற்கும் வருட இறுதியில் காணப்படும் இருப்பிற்கும் இடையிலான வேறுபாடு இருப்பு மாற்றம் எனப்படும் .

இருப்புமாற்றம் நேர்கணியமாயின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் இதன் உள்ளடங்களாவன

i) முடிவுப்பொருள் இருப்பு

ii) மூலப்பொருள் இருப்பு

iii) குறைவேலைப்பொருள் இருப்பு

## 3) பெறுமதியில் ஏற்படும் மாற்றம்

சொத்துக்களை உடமையாக்கிக் கொள்ளல் மற்றும் விற்பனை செய்தலுக்கும் இடையிலான பெறுமதி மாற்றத்தினை இது குறிக்கின்றது

சந்தை விலை மொத்த உள்ளநாட்டுச் செலவு = மொத்த நுகர்வுச் செலவு + மொத்த உள்நாட்டு மூலதனவாக்கச் செலவு

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பெருளியல்,(யா/அருணோதயாக் கல்லூரி,அளவெட்டி)

கணணி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜனார்த்தனன் ஆசிரியர் - கணிதம்,(கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சந்தை விலை மொத்த உள்ளநாட்டு உற்பத்தி மீதான செலவு = மொத்த உள்நாட்டுச் செலவு + தேறிய ஏற்றுமதி

மொத்த தேசிய வருமானம = மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு + தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம்

சந்தை விலை செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம் = சந்தை விலை மொத்த தேசிய வருமானம் + தேறிய வெளிநாட்டு நடைமுறை மாற்றல்

தேறிய ஏற்றுமதி = ஏற்றுமதி − இறக்குமதி

தேறிய வெளிநாட்டு நடைமுறை மாற்றல் = தேறிய வெளிநாட்டு அலுவலர்சார் மாற்றல் + தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்

மொத்த உள்நாட்டு சேமிப்பு = வீட்டுத்துறை சேமிப்பு + பொதுத்துறை சேமிப்பு + நிறுவனத்துறை சேமிப்பு

**அல்லது**

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பெருளியல்,(யா/அருணோதயாக் கல்லூரி,அளவெட்டி)

கணணி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜனார்த்தனன் ஆசிரியர் - கணிதம்,(கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மொத்த உள்நாட்டு சேமிப்பு = மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு — மொத்த நுகர்வு

**அல்லது**

மொத்த உள்நாட்டு சேமிப்பு = மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் + தேறிய ஏற்றுமதி

தேசிய சேமிப்பு = மொத்த உள்நாட்டு சேமிப்பு + தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம் + தேறிய வெளிநாட்டு நடைமுறை மாற்றல்

**அல்லது**

தேசிய சேமிப்பு = தேசிய செலவிடக்கூடிய வருமானம் — மொத்த நுகர்வுச் செலவு

மொத்த வளக்கிடைப்பனவு = மொத்த உள்நாட்டு உற்பத்தி + இறக்குமதி

மொத்த வளப்பிரயோகம் = மொத்த நுகர்வு + மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் + ஏற்றுமதி


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## சேலவீட்டு வழியின் மாதிரி வடிவம்

| விடயம் | தொகை | தொகை |
|---|---|---|
| 1. இறுதி நுகர்வுச் செலவு | | 500 |
| 1.1 வீட்டுத்துறை நுகர்வுச் செலவு | 375 | |
| 1.2 இலாப நேக்கற்ற வீட்டுத்துறைக்கு வழங்கப்படும் சேவைகள் | 100 | |
| 1.3 அரசின் நுகர்வுச் செலவு | 25 | |
| 2. மொத்த உள்ளநாட்டு மூலதனவாக்கம் | | 800 |
| 2.1 மொத்த நிலையான மூலதனவாக்கம் | 400 | |
| 2.2 இருப்பு மாற்றம் | 150 | |
| 2.3 பெறுமதியில் ஏற்படும் மாற்றம் | 250 | |
| 3. சந்தை விலையில் மொத்த உள்நாட்டுச் செலவு [1+2] | | 1300 |
| 4. தேறிய ஏற்றுமதி | | |
| 4.1 ஏற்றுமதி | 500 | |
| 4.2 இறக்குமதி | -300 | 200 |
| 5. சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உட்பத்தி மீதான செலவு (3+4) | | 1500 |
| 6.தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம் | | 250 |
| 7.சந்தை விலையில் மொத்தத் தேசிய வருமானம் (5+6) | | 1750 |
| 8.வெளிநாட்டு தேறிய நடைமுறை மாற்றல் | | 250 |
| 9. செலவிடக்கூடிய மொத்தத்தி தேசிய வருமானம் (7+8) | | 2000 |

Note :- செலவு வழித்தேசிய கணக்கினுள் உள்ளடக்கப்படாதவை

1) மாற்றல் கொடுப்பனவுகள்

2) பழைய பண்டங்களின் கொள்வனவுச் செலவு

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பெருளியல்,(யா/அருணோதயாக் கல்லூரி,அளவெட்டி)

கணணி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜனார்த்தனன் ஆசிரியர் - கணிதம்,(கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

3) இடைநிலைப் பண்டங்கள் மீதான செலவுகள்

4) நிதிப் பத்திரங்கள் மீதான செலவுகள்

5) அரசாங்கம் தான் பெற்ற கடனுக்கான வட்டி

## அவதானிக்க முடியாத பொருளாதாரம்

அவதானத்திற்கு உட்படாத பொருளாதார நடவடிக்கைகள் இருபிரிவுகளைக் கொண்டுள்ளன

1. மறைவான பொருளாதார நடவடிக்கைகள்
2. சட்ட ரீதியற்ற பொருளாதார நடவடிக்கைகள்

♦ மறைவான பொருளாதார நடவடிக்கை எனப்படுவது முறையான கணக்கீட்டிற்கு உட்படடாத சட்டரீதியான பொருளாதார செயற்பாடுகளாகும். வேண்டு மென்றே இச்செயல்பாடுகளை மறைத்து வைத்துக் கொள்வதற்குப் பல காரணங்கள் உள்ளன

1) வரி செலுத்துவதில் இருந்து தப்பித்துக் கொள்ளல்

2) சமூகப் பாதுகாப்பு நிதியத்தைச் செலுத்துவதில் இருந்து தப்பித்துக் கொள்ளல்

3) அரச சட்டக்கட்டுப்பாடுகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவதற்காக

உதாரணம் - குறைந்தபட்ச சம்பளம் வழங்குதல்

♦ சட்ரீதியற்ற பொருளாதாரச் செயற்பாடுகள் இரு நடவடிக்கைகளை கொண்டுள்ளன

1) சட்டத்தால் தடைசெய்யப்பட்ட பொருட்கள் சேவைகளை உற்பத்திசெய்தலும் விநியோகித்தலும்

உதாரணம் - போதைப்பொருள், விபச்சாரம்

2) சில சட்டரீதியான பண்டங்களும் சேவைகளும் சட்டரீதியாகப் பதிவு செய்யப்படாத நபர்களினால் உற்பத்தி செய்யப்படுத்தலும் விநியோகித்தலும்

உதாரணம் - குறைந்தபட்ச வைத்திய சேவை



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk